IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT MUNSIF,
THIRUMANGALAM.
O.S.No.232/2019
DEPOSITION OF WITNESS

**வா.சா. சாட்சி 1. பாலசுப்பிரமணியன் த.பெ. பால்ராஜ்**

**Solemnly affirmed and sworn by Thiru.E.Manikandan, B.A.,B.L, Principal District Munsif on 14.07.2026 in accordance with the provisions of Act XX141.**

**2** முதல் **4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை** :

1. வா.சா. ஆ 1 எனது தாத்தா பெயரில் கிரையம் பெறப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ. 1 ல் சொல்லபட்டுள்ள சர்வே எண் தெரியுமா என்றால் தெரியாது, பைமாஸ் எண் 103 ஆகும். அது 62 செண்ட் ஆகும். வா.சா.ஆ.2 ல் உள்ள சொத்தும் வழக்கு சொத்து என்றால் சரிதான். இந்த வா. சா. ஆ 2 ல் கட்டுபட்ட சொத்து என்பது 27 செண்ட் ஆகும். வா.சா.ஆ 6 வில்லாங்க சான்றானது ஜனவரி 1987 முதல் நவம்பர் 2019 வரை உள்ள காலத்திற்கானது என்றால் சரிதான். வா.சா.ஆ1, வா.சா.ஆ2 காலத்திலிருந்து ஜனவரி 1987 வரையிலான காலத்திற்கான வில்லாங்க சான்று நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

2. எனது தாத்தா சுப்பாரெட்டியார்க்கு 6 பிள்ளைகள் என்றால் சரிதான். அதில் மூத்தவர் எனது தந்தை பால்ராஜ் என்றால் சரிதான். எனது தந்தைக்கு பிறகு முறையே மகாலட்சுமி, நாகரத்தினம், தவமணி, மாரீஸ்வரி, ஜெயராணி என்றால் சரிதான். எனது தகப்பனாருக்கு 3 பிள்ளைகள் என்றால் சரிதான். அதில் மூத்தவர் நான் என்றால் சரிதான். எனக்கு அடுத்த சகோதரி லாவண்யா என்றால் சரிதான். அதற்கு அடுத்த சகோதரன் பாண்டி கண்ணன் என்றால் சரிதான்.

3. எனது சின்ன தாத்தா குருவாரெட்டியார் என்பவருக்கு 6 பிள்ளைகள் என்றால் தெரியாது. கேசவன் மற்றும் பால்ரெட்டி மட்டுமே தெரியும். மற்றொரு சின்ன தாத்தா மாரிரெட்டியாருக்கு 2 குழந்தைகள் என்றால் தெரியாது. மகாலிங்கம் என்பவரை மட்டும் தெரியும். அவரது வாரிசான மகாலட்சுமியை தெரியுமா என்றால் தெரியாது. எனது தகப்பானர் உயிருடன் இருந்த காலத்தில் 14.09.2012 ல் நல்லமாநாயக்கன்பட்டியைச் சேர்ந்த ராமசாமிரெட்டி மனைவி ஆதிலெட்சுமி என்பவருக்கு 30 செண்டை கிரையம் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படுவது மேற்படி ஆவணத்தின் சான்றிட்ட நகல் ஆகும். அது **பி.வா.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி பி.வா.சா.ஆ. 1 ஆவணத்தில் மூல பத்திரமாக கள்ளிக்குடி சார்பதிவக ஆவணம் எண் 2197/1960 ஆக பதிவு செய்யப்பட்ட பாக பத்திரப்படி என்று உள்ளது என்றால் சரிதான்.

4. மேற்படி ஆவண எண் 2197/1960 ன் சான்றிட்ட நகல் **பி.வா.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இந்த பாகபிரிவிணை பத்திரத்தில் தகப்பானர் பெற்ற தாத்தா சுப்பாரெட்டியருக்கு ஏ செட்டியூல் அட்டவணை சொத்துக்கள் ஒதுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது மற்றொரு தாத்தா குருவாரெட்டியருக்கு பி அட்டவணை சொத்து ஒதுக்கபட்டது என்றால் சரிதான். தாத்தா மாரிரெட்டியாருக்கு சி அட்டவணை சொத்து ஒதுக்கப்ட்டுள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.1 ல் கண்ட சொத்திற்கு அருகில் மேற்கு பக்கம் ஒடையும் சித்தூர் கிராமம் எல்லையும் உள்ளது என்றால் சரிதான். மேற்படி சொத்துதான் பி.வா.சா.ஆ.2 ல் 6 வது இலக்க சொத்தாக கட்டுப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.வா. சா. ஆ 2ஆவணத்தின் அடிப்படையில் தான் 3 தாத்தாக்களும் அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட சொத்தினை அடைந்து அனுபவம் செய்து வந்தார்கள் என்றால் சரிதான்.

( 2 முதல் 4 வரை பிரதவாதிகள் தரப்பு வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது. )

**மறுவிசாரணை: இல்லை.**

**திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை தட்டச்சு செய்து அவருக்கு படித்துக்காட்டி அவர் சரியென்று ஒப்புக்கொண்டு இதில் கையொப்பமிட்டார்.**

ESWARAN MANIKANDAN
Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2026.07.14 10:15:47 +0530

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**திருமங்கலம்.**